# **ADM COURT, SANKARANKOVIL**

**தேதி 13.06.2023**

**அசல் வழக்கு எண். 316/2011**

**பி.வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் நாங்கள் கிரையம் கொடுத்த பத்திரங்களில் சர்வே எண்.426 பி/6, 426 பி/5 பி, 426 பி/2 பி ல் கண்ட சொத்துக்களை கிரையம் கொடுத்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து எனக்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்டதா அல்லது சுயமாக பாத்தியப்பட்டதா என்றால் எனக்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்ட சொத்து. சர்வே எண்.426 பி/6 ல் 1.16 ஏக்கரும், 426 பி/5 பி ல் 63 சென்டும் மற்றும் 426 பி/2 பி ல் 15 சென்டும் ஆக மொத்தம் 1.94 ஏக்கர் இடத்தை சாமுவேல் வாத்தியார் என்பவர் எனது தந்தைக்கும், டேவிட், சர்குணம் மற்றும் ரத்தினசாமி ஆகியோருக்கும் 1955 ம் ஆண்டில் கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

2. மேற்சொன்ன 1.94 ஏக்கரை என் தந்தையும், டேனியல், தன்ராஜ், கோவில்பிள்ளையம்மாள், குருவம்மாள், சர்குணம், ஞானப்பிரகாசம் ஆகியோர் 1856/1963 ஆவணத்தின் கீழ் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. அந்த பாகப்பிரிவினையில் எனது தந்தை தன்ராஜ்க்கும், எனது தாத்தா டேனியலுக்கும் சர்வே எண்.426 பி/6 ல் 23 1/2 சென்ட் பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அதேபோல் மேற்சொன்ன கோவில்பிள்ளையம்மாள் மற்றும் குருவம்மாள் ஆகியோருக்கு சர்வே எண்.426 பி/6 ல் 23 சென்ட் பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அதேபோல் மேற்சொன்ன சர்குணத்திற்கும், ஞானப்பிரகாசத்திற்கும் அதே சர்வே எண்ணில் தலா 35 சென்ட் பாகமாக ஒதுக்கப்பட்டது

என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.426 பி/5 பி ல் எனது தந்தை தன்ராஜ்க்கு 31 1/2 சென்டும், குருவம்மாளுக்கு 31 1/2 சென்டும் பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அதேபோல் மேற்சொன்ன பாகப்பிரிவினையில் சர்வே எண்.426 பி/2 பி ல் எனது தந்தை தன்ராஜ்க்கு 7 சென்டும், குருவம்மாளுக்கு 8 சென்டும் பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. மேற்சொன்ன பாகப்பிரிவினையின் படி எனது தந்தைக்கு சர்வே எண்.426 பி/6, 426 பி/2 பி, 426 பி/5 பி ல் மொத்தம் 62 சென்டு பாகமாக கிடைத்தது என்றால் எனக்கு தெரியாது.

3. மேற்சொன்ன கோவில்பிள்ளையம்மாள் மற்றும் குருவம்மாள் தங்களுக்கு மேற்படி பாகத்தில் சர்வே எண்.426 பி/6 பில் கிடைத்த 23 சென்டை 6ம் பிரதிவாதியின் தந்தை சுப்பாநாயக்கருக்கு ஆவண எண்.2048/1967 பத்திரத்தின் கீழ் விற்பனை செய்துள்ளார்கள் என்றால் எனக்குதெரியாது. அதேபோல் சர்வே எண்.426 பி/5 பி ல் உள்ள 31 சென்டையும் 426 பி/2 பி ல் உள்ள 8 சென்டையும் குருவம்மாள் 6ம் பிரதிவாதியின் தந்தை சுப்பாநாயக்கருக்கு ஆவண எண்.2194/1967 பத்திரத்தின் கீழ் விற்பனை செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. மேற்சொன்ன வகையில் சுப்பாநாயக்கருக்கு மொத்தம் 97 1/2 சென்டு பாத்தியம் என்றால் எனக்கு தெரியாது.

4. எனது தந்தைக்கு பாகமாக கிடைத்த 68 சென்டிற்கும் 2004ம் வருடத்தில் பட்டா வழங்கியபோது சர்வே எண்.426 பி/6 ல் எனது தந்தைக்கு கிடைத்த 23 1/2 சென்டில் 2 1/2 சென்டுக்கு மட்டும் எடுத்து மொத்தம் 58 சென்டுக்கு புதிய சர்வே எண்.426 பி/2 பி2 ஏ என பட்டா எண்.434 என பட்டா வழங்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அதேபோல் சுப்பாநாயக்கர் கிரையம் வாங்கிய சர்வே எண்.426 பி/6 ல் உள்ள 58 சென்டுக்கு பதிலாக அவர் பெயரில் சர்வே எண்.426 பி/2 பி 1பி கீழ் 97 1/2 சென்டுக்கு பட்டா எண்.1178ன் கீழ் சுப்பாநாயக்கர் மனைவி பாப்பம்மாள், ஆழ்வார்சாமி, நாராயணசாமி ஆகியோர் பெயரில் பட்டா

வழங்கப்பட்டது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. 2004 ம் ஆண்டிலியே எனது தந்தைக்கு பாத்தியமான சொத்திற்கு புதிய சர்வே எண்.426 பி/2 பி2 ஏ என பட்டா வழங்கப்பட்டுள்ள நிலையில் அதற்குபிறகு 2007 ம் ஆண்டில் நானும், எனது தந்தையும் பழைய சர்வே எண்களான 426 பி/2 பி, 426 பி/5 பி, 426 பி/6 என குறிப்பிட்டு 3 ம் பிரதிவாதி, 5 ம் பிரதிவாதி மற்றும் 6 ம் பிரதிவாதி பெயரில் மோசடியாக பத்திரத்தை பதிவு செய்து கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. நானும், எனது தந்தையும் 4 ம் பிரதிவாதி சரஸ்வதிக்கு கிரையம்கொடுத்த 10 சென்டு போக மீதம் உள்ள 48 சென்டுக்கு 2008 ம் ஆண்டில் உட்பிரிவு செய்து சர்வே எண்.426 பி/2 பி2 ஏ ல் 17 ஏர்ஸ்ம், 426 பி/9 ல் 2.5 ஏர்ஸ்ம், 426 பி/8 ல் 4 ஏர்ஸ்ம் எனவும் உட்பிரிவுசெய்யப்பட்டது என்றால் உட்பிரிவுகளை பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு உட்பிரிவு செய்தபோது சர்வே எண்.426 பி/2 பி2 ஏ ல் 17 ஏர்ஸ்க்கும்,426 பி/9 ல் உள்ள 2 1/2 ஏர்ஸ்க்கும் எனது தந்தை தன்ராஜ் பெயரில் பட்டா எண்.434 என இருந்துவந்தது என்றால் எனக்கு தெரியாது. மேற்சொன்ன சர்வே எண்.426 பி/8 ல் உள்ள 4 ஏர்ஸ்க்கு 5 ம் பிரதிவாதி கணேசமுருகன் பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அதன்படி சர்வே எண்.426 பி/2 பி2 ஏ ல் உள்ள 17 ஏர்ஸ்ம், சர்வே எண்.426 பி/9 ல் உள்ள 2 1/2 ஏர்ஸ் இடத்தையும் என்னிடமிருந்து வாதி 2010 ம் ஆண்டு கிரையம் பெற்றார் என்றால் வாதி என்னை ஏமாற்றி மேற்படி இடத்தை பத்திரப்பதிவு செய்துகொண்டார். அதனால் நான் அந்த பத்திரங்களை ரத்து செய்யக்கோரி மாவட்ட பதிவாளரிடம் மனு கொடுத்துள்ளேன். நானும், எனது தாயாரும் 4 ம் பிரதிவாதி சரஸ்வதிக்கும், வாதிக்கும் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரங்கள் மட்டுமே உண்மையான ஆவணம் என்றாலும் நானும், என் தந்தையும் 3 ம் பிரதிவாதி மற்றும் 5, 6 பிரதிவாதிகளின் பெயரில் எழுதிக்கொடுத்த பத்திரங்கள் மோசடியானது என்றாலும் சரியல்ல. 1955 ம் வருட பத்திரத்தில் எனது தந்தைக்கு கிடைத்த 62 சென்டும், தற்போது நானும், எனது தந்தையும் 3, 5 மற்றும் 6 ம் பிரதிவாதியின் பெயரில்

எழுதிக் கொடுத்துள்ள சொத்துக்களும் வெவ்வேறு சொத்துக்கள் என்றால் சரியல்ல. நானும், என் தந்தையும் 3 மற்றும் 5 ம் பிரதிவாதியின் பெயரில் கிரையம் கொடுத்துள்ள சொத்துக்கள் சர்வே எண்.426 பி/2 பி 1 பி ல் உள்ள சொத்துக்கள் என்றால் சரியல்ல. எனவே வாதி கோரியபடி வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**